
ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ


| முழக்கம்–13 | பாஞ்சஜன்யம்<br>மே-2010-132 | ஒலி 5 |
|---|---|---|


## ‘‘குருக்ஷேத்திரத்தில் மீண்டும் ஏற்றப்பட்ட போர்க்கொடி’’

இந்தியாவில் பெரும்பான்மைசமூகத்தினர், சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இந்திய அரசியல் சட்டம் 100 முறைக்குமேல் திருத்தப்பட்டுள்ளது. கோயில் நிலங்கள் அபகரிப்பு, கோயில் நிலங்களைப் பட்டா இட்டுத் தருதல் போன்ற இந்து சமூக விரோதச் செயல்களை இந்த நாத்திக அரசாங்கம் ஊக்குவித்து வருகிறது. அதே சமயம் ஆந்திர மாநிலத்தைப் போல் ஹிந்து ஆலயங்களையும் மடங்களையும் நிர்வஹிக்க தேவையான ஒரு சுய ஆட்சிக் குழு (autonomous body) அமைக்கப் படவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழகத்தில் யாரும் முன் வைக்கவில்லை.

தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய நான்கு தென் மாநிலங்களிலும் தங்களின் ஜனத்தொகைக்குச் சிறிதும் தொடர்பில்லாமல், பெருவாரியான நிலங்களைக் கைப்பற்றுவதிலும், சர்ச்சுகள் மற்றும் மசூதிகள் கட்டுவதிலும், பொதுவிடங்களைப் பெரிதும் ஆக்கிரமித்துத் தங்களின் மதச் சின்னங்களைப் பிரம்மாண்டமாக நிறுத்துவதிலும், மேலும் பெருமளவில் மதமாற்றங்கள் புரிவதிலும், கிறித்தவ மற்றும் முகம்மதிய மத நிறுவனங்கள் பெருமளவில் ஈடுபட்டுள்ளன. ஒவ்வொரு தெருவிலும், கிராமத்திலும், ஊரிலும், மாவட்டத்திலும் அவர்களின் ஜனத்தொகைக்குச் சிறிதும் தொடர்பில்லாமல் சர்ச்சுகள் மற்றும் மசூதிகள் கட்டப்பட்டு அவை எண்ணிக்கையில் பெருகி வருகின்றன.

நான்கு தென் மாநிலங்களிலும் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றைக் நிறுவிடும் போர்வையில் விளை நிலங்களையும், பயிர் செய்வதற்கு உகந்த நிலங் களையும், மற்றும் பல மானாவாரி நிலங்களையும் கையகப்படுத் துவதில் இரண்டு மதத்தவர்களும் முனைந்து செயல்படுகின்றனர். கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் காய்கறி-பழம், மளிகை, துணி, இரும்பு-சிமெண்ட், தங்கம்-வெள்ளி நகைகள் ஆகிய வியாபாரங்களையும் மற்றும் சூப்பர் மார்க்கெட்கள், பிரம்மாண்டமான ஷாப்பிங் மால்கள், கடனளிக்கும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றையும் கையகப்படுத்தி வருகின்றனர்.

இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதமானது நம் ஹிந்து சமூகத்தைப் புற்றுநோய் போல தாக்கிப் பரவி வருகின்றது. கடலோரம் உள்ள கிராமங்களையும், மீனவர் குப்பங்களையும் கிட்டத்தட்ட முழுவதுமாக கிறிஸ்தவர்களிடமும் முகம்மதியர்களிடமும் இழந்து விட்டோம். உள்நாட்டுப் பகுதிகளிலும் பல கிராமங்கள் முழுமையாக மதமாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த இரு மத நிறுவனங்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து வரும் கணக்கிலடங்கா நிதியுதவிகள் மூலமாகத்தான் மேற்கண்டவை சாத்தியப் படுகின்றன. பெருமளவில் நிதியுதவிகள் வருவதும், மதமாற்றங்களுக்கு அவற்றை உபயோகப்படுத்தப்படுவதும், மத்திய மாநில அரசுகளுக்குத் தெரிந்தே நடக்கின்றன. இரு மத நிறுவனங்களும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும், சர்ச்சுகள் மற்றும் மசூதிகள் கட்டுவதற்கும், மதமாற்றங்களில் ஈடுபடுவதற்கும், மத்திய மாநில அரசுகள் கண்ணிருந்தும் குருடர்களாக அவற்றைக் கண்டு கொள்ளாமல் இருப் பதற்கும், ஒரே காரணம் ஹிந்துக்களிடையே நிலவிவரும் ஒற்றுமை யின்மைதான்.

எந்தவொரு அரசாங்கத்தின் இந்து விரோதக் கொள்கைக்கும் எதிராக நாம் குரல் கொடுப்பதில்லை. நமது பாரம்பரியமான பண்பாட்டினை இல்லையெனச் செய்யும் முயற்சிகள் அவ்வப்போது அரங்கேறி வருகின்றன. ஒரு சமுதாயத்தின் ஆணிவேரே அதன் பாரம்பர்யமும், பண்பாடுகளுமேயாம். இத்தகைதொரு சூழ்நிலையில் ஹரியானா மாநிலம் குருக்ஷேத்ரத்தில் ஒன்றுகூடிய ‘‘பெரியோர்கள்’’ அரசாங்கத்திற்கு அறைகூவல் விடுத் துள்ளனர். ஹிந்துக்களின் திருமணத்தை முறைப்படுத்தும் சட்டத்தை இயற்றிய மத்திய அரசு முகம்மதியர்களுக்கான திருமணச்சட்டத்தை ஏன் இயற்றவில்லை? முகம்மதியர்களின் மதக் கொள்கைகளின்படிதான் அதாவது குரானில் சொல்லப்பட்டபடிதான் அவர்கள் திருமணமும்

விவாகரத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருமதி. குஷ்புவின் இல்லறவாழ்க்கை பற்றிய கருத்துக்களை சரியென்று உச்சநீதிமன்றம் ஆமோதித்துள்ளது. இளைய சமுதாயத்தையும், நமது பண்பாட்டு நெறிகளையும் சீரழிக்கும் தீர்ப்பாகும் இது.

தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்ற நீதிபதிகளின் குடும்பங்களைச் சார்ந்த இளம் பெண்களோ அல்லது குஷ்புவின் பெண்களோ யாருடனோ ஓடிப்போய் திருமணம்செய்து கொள்ளாமல் வாழ்க்கை நடத்தும்போது தான் அந்த வலி அவர்களுக்குத் தெரியும். இதேப் போன்ற தீர்ப்பையோ அல்லது முகம்மதிய இனத்தைச் சார்ந்தவர்கள் இவ்வாறு ஓடிப் போகலாம் என்று குஷ்பு கூறியிருந்தால் அப்போது தெரிந்திருக்கும் அந்தக் கூற்றின் வலிமை. இந்து மதத்தையும் அதன் பண்பாடுகளையும் இகழ்வதில் அனைவரும் ஓர் ''சுகம்'' காண்கிறார்கள். ஆனால் வடமாநிலத்தில் தோன்றியுள்ள எதிர்ப்பலை இவர்களுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையப்போகிறது என்பதை இவர்கள் அறிந்து கொள்ளும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

''K.H.A.P. கேப் மஹா பஞ்சாயத்'' என்றதொரு அமைப்பு 2010 ஏப்ரல் 13ஆம் நாள் குருக்ஷேத்ரத்தில் தோற்றுவிக்கப்பட்டது. மனோஜ் மற்றும் பப்லி தம்பதியரை ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்றும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் என்பதற்காகவும் பஞ்சாயத்தின் ஆணைப்படி சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாதாடுவதற்காக ஒவ்வொரு ஜாட் குடும்பத்திலிருந்தும் ரூபாய் 10 நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பெரியோர்கள் ஒன்றுகூடி ''சமுதாய வாழ்க்கையும் தனிப்பட்ட மனிதரின் ஒழுக்கமும் பெரியோர்களால் கண்காணிக்கப்பட வேண்டுமே ஒழிய அரசாங்கம் இதில் தலையிடக் கூடாது'' என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர். மேலும் ஓடிப் போன பெண்ணின் தாய் தந்தையரும் பையனின் தாய் தந்தையரும் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைப் பொறுத்துக்கொள்ள இயலாது அவர்களைச் சுட்டுக் கொன்றனர். இதில் பஞ்சாயத்து எந்த ஆணையையும் பிறப்பிக்கவில்லை என்றும் கூறியுள்ளனர்.

நீதிமன்றங்கள் இதுபோன்ற வழக்குகளில் தலையிடுவதைக் கண்டித்த அந்தக் குழு ''சட்டம் என்பது சமூகத்தைப் பாதுகாக்கும் வேலி போன்றது. ஒரு சமூகத்தில் நிலவி வரும் ஒழுக்க நெறிமுறைகளுக்கும், பாரம்பரிய பண்பாடுகளுக்கும் மேற்பட்டதல்ல சட்டம். மனுஸ்ம்ருதி தொடங்கி இன்றைய விஞ்ஞான ஆய்வு முடிவுகள் ஈறாக ஒரே கோத்ரத்தைச்

சார்ந்தவர்களிடையே நிகழும் திருமணங்களின் விளைவாகப் பிறக்கும் சந்ததியினர் ஏதோ ஒருவகைக் குறைபாட்டுடன் பிறக்கிறார்கள் என்பதை அறிந்தும் இதுபோன்ற திருமணங்களை அனுமதிக்க முடியாது'' என்று அதன் தலைவர் தெரிவித்தார். ஜாட் இனத்தவரிடையே நிலவி வரும் திருமண முறைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு உயர்மட்டக் குழுவினை அந்தப் பஞ்சாயத்து நிறுவியுள்ளது.

1955ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்துத்திருமணச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று அவர்கள் தம் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர். தாங்கள் சார்ந்துள்ள இனத் தவர்களால் காலங்காலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்த நெறிமுறைகள் சட்டத்தைவிட புனிதமானவை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்துக்களின் உரிமைகள் பலவகையிலும் பறிக்கப்பட்டுகின்றன. நாட்டை நாத்திகர்கள் ஆண்டுவருவதால் 'மதச்சார்பின்மை' என்ற போர்வையில் இந்துக்களுக்கும் அவர்கள் புனிதமாகக் கருதும் வழிபாட்டுத் தலங்களுக்கும் பல்வேறு வகைகளில் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்துக்களின் இடையே ஒற்றுமை இல்லை. பல்வேறு மதப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தத்தமக்குள் சண்டையிட்டு வருகின்றனர். பக்கத்து வீடு பற்றி எரிந்தால் நம்மை அண்டாது என்ற எண்ணம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். சமுதாயத்தைத் சீர்குலையச் செய்யும் நிகழ்ச்சிகள் எது நடந்தாலும் இந்துமதத் தலைவர்கள் தம் கருத்துக்களையும் எதிர்ப்புகளையும் வெளிப்படுத்துவதில்லை. உதா ரணத்திற்குத் திருமணங்களைக் கட்டாயப் பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டத்திற்கு முகம்மதியர்கள் தம் எதிர்ப்பைத் தெரிவித்து உள்ளனர். ஆனால் இந்துமதத் தலைவர்கள் இதற்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

வேதநெறிகளின்படி அக்னி சாட்சியாக நடந்தேறிய திருமணங் களைப் பதிவு செய்வதற்கு அவசியமில்லை என்றாவது எதிர்க்குரல் கொடுத்திருக்க வேண்டும். நாம் சமுதாயத்திற்கு இழைக்கப்படும் நலி வினை எதிர்த்துக் குரல் கொடுக்காவிட்டால் அந்தச் சமுதாயம் நமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்ய முன்வராது.

ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டிருந்த நம் இந்திய நாட்டை மீட்டிட ஆயிரக்கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்து, போராடி வந்தனர். தற்போது ஆன்மீக விடுதலைக்கு இந்து சமுதாயம் போராட வேண்டு மென்பதற்கு ஓர் அறிவுப்பு மணியே குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற ''பெரியோர்களுடைய கூட்டம்.'' ✱✱✱